மதுரை,வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்.
முன்னிலை - திரு பா.குமாரவடிவேல்,பி.எஸ்ஸி(விவ)

எண். பநி3/ 1025 /2018

நாள் - 05.12.2018.

பொருள் - தமிழ்நாடு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தினால் தேர்வு - தொகுதி 4ல் அடங்கிய பணிகள் - நேரடித்தேர்வு - 2013-2014 ௳ 2014-15-ம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டது - திருமதி.ஆர்.முத்துச்செல்வி, தட்டச்சர் - பணி வரன்முறை செய்து உத்தரவிடல் - தொடர்பாக.

பார்வை - 1) செயலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் கடித எண்.861/PSD-f-2016, நாள்- 24.11.2017.

2) சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். அநிபி.3/147565/15, நாள்- 10.01.2018.

3) இவ்வலுவலகச் செயல்முறை ஆணை எண். பநி.3/1025/2018, நாள்- 25.01.2018.

4) சென்னை, வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர் (பணி மேலாண்மை) அவர்களின் செயல்முறை ஆணை எண். அபபி.1/ 73184/17, நாள்- 12.07.2018.

-------

**ஆணை:**

பார்வை (1) முதல் (3) முடிய உள்ள அரசுக்கடிதம் மற்றும் செயல்முறை ஆணைகளைத் தொடர்ந்து, 2013-2014 ௳ 2014-2015-ம் ஆண்டு நேரடி போட்டித் தேர்வின் மூலம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தினால் தட்டச்சராக தற்காலிகமாக தெரிந்தெடுக்கப்பட்டு, திருமதி.ஆர்.முத்துச்செல்வி, தட்டச்சர் பதவியில் 31.01.2018 முற்பகல் முதன்முதலாக அரசுப்பணியில் சேர்ந்து இவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (4)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தினால் மூதுரிமை நிர்ணயம் செய்து பெறப்பட்டதைத் தொடர்ந்து, இவர் தட்டச்சராக பணியில் சேர்ந்த நாளான 31.01.2018 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இந்த பணிவரன்முறை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் 2013-2014 ௳ 2014-2015 தொகுதி IV பணி நியமனம் தொடர்பாக நிலுவையில் உள்ள வழக்குகளின் தீர்ப்பிற்கு உட்பட்டதாகும்.

D:\g drive\A3\2018\1025-2018(05.12.2018) Proc..doc

Scanned by CamScanner

இவர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டு கால தகுதிக்காண் பருவம் முடிக்க வேண்டும் எனத் தெரிவிக்கலாகிறது.

ஒம்/-பா.குமாரவடிவேல்,
வேளாண்மை இணை இயக்குநர்,
மதுரை.

பெறுநர்

திருமதி.ஆர்.முத்துச்செல்வி,
தட்டச்சர் - இவ்வலுவலகம்.

நகல் - க1 பிரிவு - இவ்வலுவலகம்.
நகல் - இருப்புக் கோப்பு.

// உத்தரவின்படி //

ஆட்சி அலுவலர் 10/12/18

10/12/18

D:\g drive\A3\2018\1025-2018(05.12.2018) Proc..doc

Scanned by CamScanner